TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவியல் நடைமுறை விதி 154 இன் கீழ்)

C 8109473

1. District : மாவட்டம் திருவாரூர் PS : காவல்நிலையம் V&AC Year : ஆண்டு 2023 FIR No : மு.த.அ. எண் 8 Date : நாள் 07.12.2023

2. (i) Act சட்டம் Prevention of Corruption Act 1988 as amended 2018 Sections பிரிவுகள் 7
(ii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 02.12.2023 Over Cell phone. 04.12.2023 மதியம் சுமார்
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 12.00மணி அந்திக்கடை மின்சார அலுவலக வளாகம்.
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 06.12.2023 at 18.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் FIR Time நேரம் 07.12.2023 at 07.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் டைப் செய்து எழுதப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரம், எத்திசையில் அந்திக்கடை, கிழக்கு, சுமார் 15 கி.மீ மேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவல்நிலையம் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.A.அமீர்கான் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் அப்துல் காதர்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 36/2023 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 649, கிழக்குதெரு, அந்திக்கடை, கூத்தாநல்லூர் தாலுகா, திருவாரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / சந்தேகப்படுகின்ற / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)

1. திரு.ஆனந்த், அந்திக்கடை ஜூனியர் லைன்மேன் EB. கூத்தாநல்லூர் தாலுகா. திருவாரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் திருமதி. D.அனிதாஆரோக்கியமேரி ஆகிய நான் 06.12.2023-ந் தேதி மாலை 18.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.M.A.அமீர்அலி என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்து வரப்பெற்ற புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் M.A.அமீர்அலிவயது 36/2023 த/பெ. அப்துல்காதர் 649 கீழத்தெரு அத்திக்கடை, கூத்தாநல்லூர் தாலுக்கா திருவாரூர் மாவட்டம். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் கூத்தாநல்லூர் தாலுக்கா அத்திக்கடை கீழத்தெருவில் என் குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் M.Com வரை படித்துள்ளேன். நான் சென்னையில் கடந்த 4 வருடமாக பேக்கரி பொருட்கள் விற்பனை செய்யும் Sales Man ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது அம்மா மும்தாஜ்பேகம் பெயரில் திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, அத்திகடை கீழத்தெருவில் நம்பர் 649 எண்ணில் விடு உள்ளது. கீழ் தளத்தில் உள்ள வீட்டின் மேல் தளத்தில் தற்சமயம் புதியதாக விடுகட்டி உள்ளேன். வீட்டிற்கான அனைத்து வேலைகளும் முடிந்துவிட்டதனால் EB கனெக்ஷன் பெறுவதற்காக கடந்த 19.11.2023 ந் தேதி கூத்தாநல்லூர் போஸ்ட் ஆபீஸ்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக பதிவு செய்யப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
காவல் ஆய்வாளர் VSAC திருவாரூர்

Name: பெயர் ..............................
Rank: நிலை ......................No. எண் ..........

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

(குற்ற எண். 08/2023 FIR-ன் தொடர்ச்சி...,)

எதிரில் உள்ள தனியார் இ.சேவை மையத்திற்கு சென்று ஆன்லைனில் பதிவு செய்தேன். அதற்கான அப்ளிகேசன் நம்பர் 2000658711231269 ஆகும். பின்னர் மறுநாளே கூத்தாநல்லூர் EB அலுவலகத்தில் இருந்து லைன் இன்ஸ்பெட்டர் வந்து இடத்தினை பார்த்துவிட்டு சென்றார். நான் ஆன்லைனில் EB கனெக்ஷன் பதிவு செய்து, இடத்தினை வந்து பார்த்துவிட்டு சென்று ஒருவாரம் ஆகியும் EB கனெக்ஷன் கொடுக்க வரவில்லையே என்று ஆன்லைனில் சென்று பார்த்தேன். அப்போது ஆன்லைனில் பதிவு மட்டும் செய்யப்பட்டுள்ளது என்று காண்பித்ததால் நான் 27.11.2023 ந் தேதி ஆன்லைனில் EB Grievances-க்கு புகார் தெரிவித்தேன். பின்னர் 28.11.2023-ந் தேதி EB service connection No 065870212105 என்ற எண்ணின் படி கொடுக்கப்பட்டதாக எனது அப்பாசெல் நம்பர் 8489318952-க்கு குறுந்தகவல் வந்தது. பின்னர் நான் ஆன்லைனில் புகார் அளித்ததால் அத்திக்கடை ஏரியாலைன் மேன் ஆனந்த் என்பவர் தனது செல் நம்பர் 9629122192-லிருந்து எனது செல் நம்பர் 9865476922-க்கு கடந்த 02.12.2023 ந் தேதி தொடர்பு கொண்டு நீங்க ஒயர் கனெக்ஷன் கொடுக்காம ஆன்லைன் புகார் ஏன் அளித்தீர்கள் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் EB கனெக்ஷனுக்காக ஆன்லைனில் மனு அளித்து EB –யிலிருந்து தனக்கு யாரும் தொடர்பு கொள்ளாததால் ஆன்லைனில் புகார் அளித்தேன் என்று கூறினேன். அதற்கு லைன்மேன், ஒயர் கனெக்ஷன் முதல்ல கொடுங்க, மீட்டர் பாக்ஸ் எங்கிட்டதான் இருக்கு, EB கனெக்ஷன் கொடுக்க ரூ.2000/- செலவாகும் என லஞ்சமாக பணம் கேட்டார். நான் ஒயர் கனெக்ஷன் இருக்கானு சரிபார்த்துவிட்டு வருகிறேன் என்று கூறி போனை வைத்து விட்டேன். பின்னர் வீட்டிற்கு வந்து ஒயர் கனெக்ஷன் கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை பார்த்தபோது ஏற்கனவே கீழ் வீடுபோடும் போதேஒயர் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. எனவே 04.12.2023 ந் தேதிலைன் மேன் ஆனந்தை அவர் எப்போதும் அமர்ந்திருக்கும் அத்திக்கடை பெரியபள்ளிவாசல் பின்புறம் மதியம் சுமார் 12.00 மணியளவில் சென்றுபார்த்து ஏற்கனவேஒயர் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருந்ததை கூறி, EB கனெக்ஷன் கொடுக்க வருமாறு கேட்டேன். அதற்கு லைன்மேன் ஆனந்த் கனெக்ஷனுக்குரிய பொருட்கள் வாங்கி வைங்க என்றும், ரூ 2000/- லஞ்சமாக பணம் கொடுத்தால் தான் வீட்டிற்கு வந்து EB கனெக்ஷன் கொடுப்பேன் என்று கூறிவிட்டார். சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கப்பட்டு மீட்டர் பாக்ஸ் வந்தும், எனது வீட்டிற்கு EB கனெக்ஷன் கொடுப்பதற்கு என்னை அலைய விடுகிறாரே என மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். எனக்கு அவர் கேட்ட ரூ2000/- லஞ்சபணத்தை கொடுக்க விருப்பம் இல்லாததால் லைன்மேன் ஆனந்த் கேட்ட ரூ.2000/- லஞ்சபணத்தை தயார் செய்து மேற்படி லைன்மேன் ஆனந்த் மீது சட்டப் படி நடவடிக்கை எடுப்பதற்கு புகாரினை தயார் செய்து கொண்டு 06.12.2023-ந் தேதி மாலை 6.00 மணிக்கு திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். புகாருடன் மின் இணைப்பு வேண்டி ஆன்லைனில் மனு அளித்ததற்கான ரசீது எண்.2000658711231269 நகல், எனது அப்பாவின் செல் நம்பருக்கு EB சர்வீஸ் கொடுப்பதற்காக மின் வாரியத்திலிருந்து அனுப்பப்பட்ட குறுஞ் செய்திகளின் பிரின்ட் எடுத்த நகல், எனது அம்மா பெயரில் உள்ள வீட்டின் கிரய பத்திரத்தின் நகல் மற்றும் மேல்வீடு, கீழ்வீட்டின் வீட்டு வரி ரசீதுகள் 1408, 1409 நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள Sd (xxxxxxxxxxx) M.A.அமீர் அலி 06.12.23 ) Sir,

(குற்ற எண். 08/2023 FIR-ன் தொடர்ச்சி...,)

Tmt.D.Anitha Arockiamary, Inspector of Police, is instructed to verify the authencity and genuineness of the complaint, also verify the reputation of the suspect officer and proceed on merits. Sd (xxxxxxxxxxx) DSP, V&AC, TVR அய்யா, மேற்படி புகாரின் பேரில் உத்தரவுபடி எதிரி மீது முன்விசாரணை செய்து இப்புகார்மனு மீது திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 08/2023 ச/பி 7 of Prevention of Corruption Act 1988 as amended 2018-ன் படி 07.12.2023-ந் தேதி காலை 07.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd (XXXXXX) 07.12.2023 D.அனிதா ஆரோக்கிய மேரி, Inspector of Police, V&AC, Thiruvarur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

D Anitha
07/12/23

(D. Anitha Arockiamary)
Inspector of police,
V&AC.
Thiruvarur.